

மதுரை வடக்கு மாவட்ட திமுக கிழக்கு தொகுதி திருமோகூர் ஊராட்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி இல்லம் தேடி அனைத்து மக்களுக்கும் நலத்திட்டங்களை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் அ. பா.ரகுபதி, ஊராட்சி மன்ற தலைவர் அண்ணாமலை, பகுதி செயலாளர் சசிகுமார் மற்றும் திரளான கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளனர்.

குடியரசுத் தலைவர் – தமிழ்நாடு அரசுக்குப் பாராட்டு!

# சமூக நீதிக்கு சூட்டப்பட்ட மேலும் ஓர் மணிமகுடம்!

## தினகரன் நாளேடு பாராட்டு!

சென்னை, டிச.2-

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் பழங்குடியினர் நலன்கள் குறித்து தமிழ்நாடு அரசுக்கு பாராட்டு தெரிவித்திருப்பது, இங்குள்ள சமூக நீதிக்கு சூட்டப்பட்ட மேலும் ஓர் மணிமகுடம் என்று தினகரன் நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது.

அது வருமாறு:-

பெருமைக்குரிய இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு, 4 நாட்கள் பயணமாக தமிழ்நாட்டின் கோவைக்கு வந்தார். நேற்று முன்தினம் ஊட்டி ராஜ்பவனில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தோடர், கோத்தர் உள்ளிட்ட 6 வகை பழங்குடியின மக்களை சந்தித்து கலந்துரையாடினார். அவர்கள் மத்தியில் பேசுகையில், நமது பிரதமரிடமும், அரசு அதிகாரிகளிடமும் பழங்குடி மக்களுக்கான கல்வி, சமூக மேம்பாடு, ஆரோக்கியம் உள்ளிட்ட அனைத்தும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன்.



தினகரன்

டிசம்பர் 1, 2024 ஞாயிற்றுக்கிழமை

பாராட்டு மணிமகுடம்

பெருமைக்குரிய இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு, 4 நாட்கள் பயணமாக தமிழ்நாட்டின் கோவைக்கு வந்தார். நேற்று முன்தினம் ஊட்டி ராஜ்பவனில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அப்போது நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தோடர், கோத்தர் உள்ளிட்ட 6 வகை பழங்குடியின மக்களை சந்தித்து கலந்துரையாடினார். அவர்கள் மத்தியில் பேசுகையில், நமது பிரதமரிடமும், அரசு அதிகாரிகளிடமும் பழங்குடி மக்களுக்கான கல்வி, சமூக மேம்பாடு, ஆரோக்கியம் உள்ளிட்ட அனைத்தும் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன். இங்குள்ள தமிழ்நாடு அரசு, பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக மாநில அரசுக்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

இங்குள்ள தமிழ்நாடு அரசு, பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காக மாநில அரசுக்கு பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்னதாக, "நான் நிறைய இடங்களுக்கு செல்லும் போது, அங்குள்ள பழங்குடி மக்களை சந்திப்பேன். நானே ஒரு பழங்குடியாக இருப்பதால், அந்த மக்களின் பிரச்னைகள் என்னவென்று எனக்கு நன்றாகத் தெரியும். கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டில் பழங்குடியினர், பரிதாபகரமான நிலையில் தான் உள்ளனர்.

குறிப்பாக பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா போன்ற ஒன்றிய அரசின் திட்டப்பலன்கள், பழங்குடியினரை சென்றடையவில்லை,'' என்ற தனது ஆதங்கத்தையும் பதிவு செய்துள்ளார்.

முதல் குடிமகளின் அரும்பாராட்டை பெற்றுள்ள தமிழக அரசு, அடித்தட்டு மக்களின் மேம்பாட்டுக்காக சமூகநீதி சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது, அனைத்து மாநிலங்களும் அறிந்த ஒன்று. இந்தவகையில் பழங்குடியின மக்கள் மேம்பாட்டுக்காகவும், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

குறிப்பாக அவர்களின் கல்விக்கும், சமூக மேம்பாட்டுக்கும் வழிவகுக்கும் வகையில் வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இதற்கு பழங்குடியின மாணவர்களை தொழில்முனைவோராக உயர்த்தியதே ஆகச்சிறந்த வரலாற்று சான்று. முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிநடத்தும் தமிழ்நாடு அரசின் புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை கடந்த 20.9.2023ல் வெளியிடப்பட்டது. அதில் பட்டியலின மற்றும் பழங்குடியினரால் நிறுவப்படும் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவித்து, ரூ.80கோடி சிறப்புநிதியை ஒதுக்கீடு செய்தது. இதிலிருந்து 38 நிறுவனங்களுக்கு ரூ.55.20 கோடி பங்கு முதலீடுகள் வழங்கியுள்ளது.

இதன் மூலம் சென்னை மட்டுமன்றி சேலம், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி, கோவை, ஈரோடு, நீலகிரி மாவட்டங்களை சேர்ந்த பழங்குடியின மாணவர்களும் பயன் பெற்றுள்ளனர். பழங்குடியினர் என்ற குறியீடு ஒருபுறம் இருந்தாலும் இயந்திரவியல், வேளாண் தொழில்நுட்பம், ஊடகத்துறை, செயற்கை நுண்ணறிவு, மருத்துவ தொழில் நுட்பம், பசுமை எரிவாயு தயாரித்தல், இணையவழி வணிகம், உணவு மதிப்பு கூட்டுதல், விண்வெளித் தொழில் நுட்பம் என்று பல்வேறு துறைகளில், புத்தாக்க வணிக மாதிரிகளை கொண்டு அவர்கள் துவங்கிய நிறுவனங்கள் இயங்குவது மேலும் ஒரு தனிச்சிறப்பு.

இப்படி பல்வேறு முயற்சிகளை முனைப்புடன் மேற்கொண்டு, புத்தாக்க தொழில் வளர்ச்சியில் பழங்குடியின மலைவாழ் இளைஞர்களின் வாழ்வை மலரச்செய்துள்ளார் தமிழ் நிலத்தின் முதல்வர். இதற்காக பழங்குடியின மக்கள் முதல்வருக்கும், அரசுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், பழங்குடியின சமூகத்தில் இருந்து, நாட்டின் முதல்குடிமகளாக உயர்ந்து நிற்கும் பெருமைக்குரிய ஜனாதிபதியின் பாராட்டு, நமது அரசுக்கு கிடைத்துள்ளது. இது சமூகநீதிக்கு சூட்டப்பட்ட மேலும் ஒரு மணிமகுடம் என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு 'தினகரன்' நாளேடுபாராட்டியுள்ளது.




கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி மற்றும் துணை இயக்குநர் மாவட்ட சுகாதார பணிகள் சார்பில் "முத்தமிழறிஞர் கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம் டி.வி.டி. மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் மேயர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தார். முகாமில் பொது மருத்துவம், சர்க்கரை நோய், இதய நோய், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை உட்பட பல்வேறு நோய்களுக்கான மருத்துவ சிகிட்சை வழங்கப்பட்டது. மேலும் முகாமில் 15 கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கப்பட்டது. முகாமில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர் ஜவகர், உதவி ஆணையர் பாலசுந்தரம், மருத்துவர் சஜில் ராஜ், பொது மக்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா பா. நாகலிங்கம்**

**டிசம்பர் 1 (2006)**



**கழகத்தில் 1953ஆம் ஆண்டு உறுப்பினராகி பின்னர், 1957 முதல் 1967 வரை பொன்னேரி வட்டக் கழகப் பொருளாளராகப் பணியாற்றினார்.**

**1967 மற்றும் 1971 ஆகிய இரண்டு முறை பொன்னேரி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்று, தொகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**நெருக்கடிகாலத்தில் 'மிசா' கைதியாக சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தால்

# ஜனநாயக குடியாட்சி முறை உருக்குலைந்து சிதறடிக்கப்படும்!

**பொன்.முத்துராமலிங்கம்**

முன்னாள் அமைச்சர் –
கழக உயர்நிலை
செயல்திட்டக்குழு உறுப்பினர்



**1949** நவம்பர் திங்கள் 26 ஆம் நாள் இந்திய அரசியல் சட்டம் நாட்டுக்கு பிரகடனப்படுத்தப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறும் இந்த 2024ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் நாள் இந்திய ஒன்றியத்திற்கு ஓர் புதிய தன்னாட்சி சகாப்தம் தொடங்கிய நிகழ்ச்சியின் நினைவு நாளாகும்!

ஆங்கிலேயரின் ஆட்சி முறையிலிருந்து வேறுபட்டு ஜனநாயக, குடியரசு ஆட்சிமுறைக்கான அடிப்படைகளைக் கட்டமைத்துக் கொண்டு, இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கி, நாட்டுக்குப் பிரகடனப்படுத்திய வரலாற்று பெருமைவுடைய இந்த நாளை, ஒன்றிய அரசு, மாநில அரசுகளும் மக்களுக்கு நினைவுபடுத்துகின்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, மாநிலங்களிலே முதலமைச்சர்களும், ஒன்றியத்தில் குடியரசுத் தலைவர், பிரதமஅமைச்சர், உச்சநீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதி, நாடாளுமன்றத்தினுடைய அவைத் தலைவர் ஆகியோர் இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு தங்களுடைய பாராட்டுகளையும், மேலான கருத்துரைகளையும், சிந்தனைகளையும் வழங்கியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டின் சார்பாக தமிழக முதலமைச்சர், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளோடும், அமைச்சர்களோடும் இணைந்து இந்திய அரசியல் சட்டத்தினுடைய முகவுரையைப் (Preamble of the constitution) படித்து அதன் வழி நடப்போம் என உறுதிமொழி எடுத்துள்ளார்கள். ஒன்றிய தலைநகர் டெல்லியில் உச்சநீதிமன்றத்தின் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றும் பொழுது நமக்கு நமது தேசமே முதன்மையானது, முன்னுரிமைக்கானது என்ற தீர்க்கமான உணர்வுதான் இந்திய அரசியல் சட்டத்தை காலமெல்லாம் உயர்ப்புடன் வைத்திருக்கும் என்ற கருத்தை பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும், இந்திய அரசியல் சட்டத்தை வழிகாட்டும் விடிவெள்ளியாகவும், வற்றாத நீரோடையாகவும் மக்களின் தேவைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் காலமெல்லாம் வழிகாட்டும் என்பதை நினைவு படுத்திய பிரதமர், அரசியல் சட்டத்தை வலுப்படுத்துகின்ற வகையில் நிறைவேற்றப்பட்ட பல்வேறு நலத்திட்டங்களை பட்டியலிட்டுக் காட்டியுள்ளார்கள். இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதிமுர்மு அவர்கள் நாடாளுமன்றத்தினுடைய கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றும் பொழுது இந்திய அரசியல் சட்டம், முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் உயிரோட்டமான ஆவணமென்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அவருடைய உரையில் இந்திய அரசியல் சட்டத்தின் முன்னுரையில் (Preamble of the constitution) தெரிவிக்கப்பட்ட அரசியல் சட்டத்தினுடைய அடிப்படை நோக்கங்கள் எவையெவை என்பதைக்குறிப்பிடும் பொழுது, மதச்சார்பற்ற ஆட்சிமுறை(Secularism), சமதர்மம் என்ற ஏற்றத்தாழ்வற்ற சமூகநிலை(Socialist) என்ற கோட்பாடுகள் உரையில் விடுபட்டிருக்கிறது. குடியரசுத் தலைவருடைய உரை என்பது ஒன்றிய அரசினுடைய கருத்தோட்டங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட உரையாகத் தான் இருக்க முடியும். இவ்வாறு, ஒன்றிய அரசால் தயாரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட குடியரசுத் தலைவருடைய உரையில் மதச்சார்பற்றக் கோட்பாடும், சமதர்மக் கோட்பாடும் விடுபட்டிருப்பது கவனமின்மையால் தவறுதலாக விடுபட்டுவிட்டது என்ற விளக்கத்தை ஏற்றுக்கொள்ள வியலாது.

இந்த இரண்டு சொற்றொடர்கள் குடியரசுத் தலைவர் உரையில் இடம்பெற்றுவிடக்கூடாதென ஒன்றிய அரசு முன்கூட்டித் திட்டமிட்டு இந்தச் சொற்றொடர்கள், குடியரசுத் தலைவர் உரையில் நிராகரிக்கப்பட்டிருக்கிறது படுஎன்றுதான் தீர்க்கமாக அனுமானிக்க முடிகிறது. இந்திய அரசியல் சட்டத்தின் நோக்கங்களுக்கு உயிரோட்டமாக உள்ள இந்த இரண்டு சொற்றொடர்களும் விடுபட்டிருக்கிறது என்பதையும், அந்தச் சொற்றொடர்கள் சேர்க்கப்பட வேண்டுமெனவும் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளது ஊடகங்களில் வெளிவந்துள்ளது.

அரசியலில் மதச்சார்பின்மையும், பொருளாதாரத்தில் சமதர்மக் கோட்பாடும்தான் இந்திய ஒன்றியத்தினுடைய ஒற்றுமையை நிரந்தரமாக கட்டிகாக்கும் வலிமையான சக்திகளாகும் என்பதை தமிழ்நாட்டின் முதல்வர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள் என்பதையும் இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். பல்வேறு மதம் சார்ந்த, பல்வேறு பண்பாட்டு அடையாளங்களைக் கொண்ட தேசிய இனங்களை ஒரே ஆட்சி முறையில் கட்டமைத்துப் பாதுகாக்க வேண்டுமாயின் அதற்கான அச்சாணிகளாகப் பயன்பாடுகின்ற கோட்பாடுகள்தான் மதச்சார்பற்ற ஆட்சிமுறையும், சமதர்மக் கோட்பாடுகளும் என்பதில் இருவேறு சிந்தனைகளுக்கு இடமில்லை என்பது தெளிவாகும்.

இந்திய ஒன்றியத்தின் பிரதமர் மோடி அவர்கள் தேசம் தான் முதன்மையானது, முன்னுரிமை பெற்றது என்ற சிந்தனைதான் இந்திய அரசியல் சட்டத்தை காலமெல்லாம் உயிர்ப்புடன் பாதுகாக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் "தேசியம்" என்பதற்கு பிரதமர் என்ன விளக்கம் கொடுக்கவுள்ளார் என்பதுதான் மிகவும் முக்கியமானது மட்டுமல்ல, இந்திய குடிமக்கள் விழிப்புடன் கவனிக்கவேண்டிய மிக முக்கியமான பிரச்சனையாகும்.

ஆனால் தொடர்ந்து ஒன்றியப் பிரதமர் முழங்கிக் கொண்டிருக்கும் முழக்கங்கள் "ஒரே நாடு" அதுவும் இந்துத்துவாக் கோட்பாட்டின் அடிப்படையிலான "இந்துராஷ்ட்ரம்" தான் என்றால், ஒன்றியப் பிரதமரின் முழக்கங்கள், அடிப்படையிலான "தேசியம்" பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவிற்கு எப்படிப் பொருந்தும்? இந்த முழக்கங்கள் மூலம் இந்திய நாட்டின் தேச ஒற்றுமை பலவீனமடைந்துவிடாதா? என்பதை இந்தியாவின் குடிமக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

இந்திய தேசியம் என்பதற்கு, பாரதீய ஜனதாக் கட்சியும், அதன் சித்தாந்த வழிகாட்டியுமான ராஷ்ட்ரிய சுயம் சேவக் சங்க் என்ற மதவாத அமைப்பும், மதவாத விளக்கத்தையே இந்திய தேசியத்துக்குத் தருகிறார்கள். இவர்களின் இந்த விபரீதமான விளக்கத்தை சுட்டிக் காட்டுகின்ற வகையில் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற மேலவையில் பேசும்பொழுது தேசியம் தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.(Nationalism is misinterpreted) இந்திய ஒன்றிய நிலப்பகுதியில் இயல்பாகவும், இயற்கையாகவும் அமைந்துள்ள எதார்த்தங்களின் அடிப்படையில் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் "தேசம்", "தேசியத்திற்குப்" பொருள் கொள்ளவில்லை.

எனவேதான், பிரதமர் மதவாததேசப்பற்றுதான் இந்திய அரசியல் சட்டத்தை உயர்ப்புடன் காப்பாற்றும் என்ற உள்நோக்கத்துடன் தன் உரையை நிறைவுசெய்துள்ளார். இதன் பிரதிபலிப்பாகத்தான் ஒன்றிய அரசின் அங்கீகாரம் பெற்ற குடியரசுத் தலைவரின் உரையில் மதச்சார்பற்ற தன்மையும், சமதர்மக் கோட்பாடும் விடுபட்டுள்ளது. ஒரேகாலக்கட்டத்தில் ஒரே பொருள் குறித்துப் பேசப்பட்ட நாட்டின் உயர்ந்த நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களின் கருத்துக்களை ஆழ்ந்து ஆய்வு செய்தால் மதச்சார்பற்ற தன்மையிலும், சமதர்மக் கோட்பாட்டிலும் ஒன்றிய ஆட்சிப் பொறுப்பில் உள்ள பா.ஜ.க.விற்கு நம்பிக்கையில்லை என்பது தெளிவாகவே மக்களுக்குப் புரிகிறது.

இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமை, நிரந்தரமாகப் பாதுகாக்கப்படுவதற்கு, இந்திய அரசியல் சட்டத்தின் முன்னுரையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மதசார்பற்ற கோட்பாடும்(Secularism), சமதர்மக் கோட்பாடும்(Socialist), நேர்மையாகக் கடைபிடிக்கப்பட வேண்டும் இல்லையெனில், இந்திய அரசியல் சட்டத்தை வார்ப்பித்த சட்டமேதை பாபாசாகிப் அம்பேத்கர் அவர்கள் கூறிய ஆணித்தனமான தொலைநோக்கு சிந்தனையுடன் கூடிய எச்சரிக்கைதான் "சமூக – பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் தொடருமானால் அரசியல் ஜனநாயகம் அபாய கட்டத்தை அடைந்துவிடும்" என்பதாகும். (Reiterating Babasaheb's words that social and economic inequality will put political democracy in peril), (The Hindu 27.11.2024, Page No - 10, From Republic to a republic of unequals) இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமை நிரந்தரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், இந்திய அரசியல் சட்டம் காலமெல்லாம் உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனில், சமூக சமத்துவத்திற்கு பெரும் தடையாகவுள்ள சாதியை ஒழித்துவிடவும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளற்ற சமத்துவத்தை உருவாக்கி அதன் மூலம் "எல்லோருக்கும் எல்லாம்" என்ற திராவிடமாடல் சமத்துவக் கோட்பாட்டை அமல்படுத்துவதற்கான அரசியல் சட்டத் திருத்தங்களை ஒன்றிய அரசுடன் மேற்கொண்டு அமல்படுத்த தொடங்குமானால் இந்திய ஒன்றியத்தின் ஒற்றுமையும், இந்திய அரசியல் சட்டமும் நிரந்தரமாக்கப்படும் என்பதே மக்களின் ஒட்டுமொத்த கருத்துக்களின் பிரதிபலிப்பாகும்.

அரசியல் சட்டமே, மக்களின் ஒப்புதலோடு அம்பேத்காரால் உருவாக்கப்பட்டு, மக்கள் ஏற்றுக் கொண்டு பிரகடனப்படுத்தப்பட்ட நாள்தான் 26.11.1949, அந்த வரலாற்று நிகழ்வு நடைபெற்று 75 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில் அரசியல் சட்டம் மக்களால் பாபாசாகிப் அம்பேத்கார் மூலம் உருவாக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டு, அமல்படுத்தப்பட்ட சூழ்நிலையில், அரசியல் சட்டத்தை உருவாக்கி, பிரகடனப்படுத்தப்படுவதற்குஉந்துசக்தியாகவிருந்த மக்களின் எண்ணமும் சிந்தனையும் இதுதான் என்று வெளிப்படுத்துவது மக்களின் கடமை என்பதால், இந்தக் கருத்துக்களை இந்தியக் குடிமக்களின் கருத்தாகவே ஒன்றிய அரசு கருதி காரியமாற்றிடும் என நம்புவோமாக.




மதுரை மாநகர் மாவட்டம்,பழங்காநத்தம் பகுதி கழகம் சார்பாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் மாணவியருக்கு நலத்திட்ட உதவிகள் விளையாட்டு உபகரணங்கள் பள்ளி கலையரங்கில் மின்விசிறிகள் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகளை மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாடு எஸ்.வி.சுதன், மாவட்ட துணை செயலாளர் மூவேந்திரன் மண்டல தலைவர்கள் முகேஷ் சர்மா, சரவணபுவனேஸ்வரி பகுதி செயலாளர்கள் அமுதா தவமணி, காவேரி,மதிவெங்கடேஷ்,வட்ட கழகச் செயலாளர்கள் சௌந்தர்ராஜன், முனியாண்டி, வேல்முருகன், ராஜேஷ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.